**செய்தி வெளியீடு எண் : 1405** **நாள்:24.12.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

### கணினித் தமிழ் வளர்ச்சியும் சவால்களும் – நூல் வெளியீடு

இணையம் வழியாகத் தமிழ்மொழியை உலகெங்கும் பறை சாற்றிக் கொண்டிருக்கும் தமிழ் இணையக் கல்விக்கழகம் மாறி வரும் கல்விச் சூழலுக்கேற்ப கல்வியில் புதுமையைப் புகுத்தும் வண்ணமாகத் தமிழ் சார்ந்த மென்பொருள்களை உருவாக்கிப் பொதுப் பயன்பாட்டிற்கு இலவசமாக அளித்து வருகிறது. மேலும் கணினியில் தமிழை உட்புகுத்திக் கணினி சார்ந்த எண்ணற்ற பணிகளை மேற்கொள்ளும் வண்ணம் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், மொழியியல், கணினி சார்ந்த பேராசிரியர்கள், வல்லுநர்கள் எனப் பல்வேறு துறை சார்ந்தவர்களைக் கொண்டு தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் நடத்தப்பட்ட **'கணினித் தமிழ் வளர்ச்சியும் சவால்களும்'** என்ற இணையவழிப் பன்னாட்டு மாநாட்டின் மூலம் பெறப்பட்ட சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுப் பன்னாட்டுத் தரப்புத்தக எண்ணுடன் கூடிய இரு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி புத்தகங்களை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள் இன்று (24.12.2021) வெளியிட்டார். இப்புத்தக வெளியீட்டு நிகழ்வில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப. மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் தமிழ் மொழியின் பயன்பாட்டைப் பிற மொழியியலாளரிடம் பரப்பவும், பழந்தமிழ் நூல்களைப் பலரும் எளிதில் படித்தறியவும், அறிவியல் முதலான பிற துறை அறிவைத் தமிழில் வழங்கவும் கணினித் தமிழ் பெரிதும் பயன்படுகிறது எனவும், மொழியைக் கணினியின் ஊடாகப் பொதுவான பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தும்போது வளர்ந்து வரும் சமூகம் மேம்பாடு அடைவதற்கு வாய்ப்பாக அமையும் எனவும் தெரிவித்தார்கள்.

இன்றைய காலச் சூழலில் இணையம் வழியாகக் கற்கும் மாணவர்களின் மனநிலையை அறிந்து தொழில்நுட்பத்தின் மூலம் கற்றலில் புதுமையை ஏற்படுத்தவும், புதிய தலைமுறையினர் பன்முக நோக்கில் ஆராய்வதற்கு ஏதுவாக செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டை உருவாக்குவதற்கும் கணினித் தமிழ் பெரிதும் உறுதுணை புரிகிறது.

கணினித் தமிழ் வளர்ச்சியும் சவால்களும் என்ற இவ்விணையவழிப் பன்னாட்டு மாநாட்டின் ஆய்வுப் புத்தகங்கள் பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், ஆராய்ச்சியாளர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் என அனைவருக்கும் பயன்படும் வண்ணம் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் www.tamilvu.org என்ற இணையதளத்தில் மின்புத்தகமாகப் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இப்புத்தகத்தினை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்பெறலாம். மேலும், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் கணித் தமிழ்ப் பேரவை செயல்படும் பல்கலைக்கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் இப்புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**